**வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **10/02/2024** | முதல் | **14/02/2024** |
| அறிக்கை எண் : | **012/ 2024** | வெளியீட்டு நாள் : | **09/02/2024** | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (04.02.2024 **முதல்** 08.02.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 14-02-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/02 | 05/02 | 06/02 | 07/02 | 08/02 | **தேதி** | நாள்-1 10/02 | நாள்-2 11/02 | நாள்-3 12/02 | நாள்-4 13/02 | நாள்-5 14/02 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 34 | 35 | 34 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 22 | 22 | 21 | 22 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 22 | 23 | 22 | 23 |
| 3 | 3 | 2 | 2 | 2 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 2 | 0 | 2 | 3 |
| 81 | 76 | 85 | 87 | 82 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 100 |
| 41 | 44 | 44 | 41 | 37 | | 40 | 40 | 40 | 50 | 40 |
| 8 | 7 | 7 | 11 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 14 | 12 | 10 | 12 |
| வட கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் தெளிவாக காணப்படும். மணிக்கு 10 முதல் 14 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளதால், விவசாயிகள் உங்கள் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

அதிகாலை நேரங்களில் மூடுபனி நிலவ வாய்ப்புள்ளதால், உங்கள் கால்நடைகளை சூரிய உதயத்திற்கு *2* மணி நேரத்திற்குப் பிறகு மட்டுமே மேய்ச்சலுக்கு அனுமதிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 10 முதல் 14 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு

பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (9 முதல் 22 பிப்ரவரி 2024):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் 9 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இயல்பை விட குறைந்தது முதல் இயல்பை ஒட்டிய லேசான மழைக்கு வாய்ப்பு உள்ளது

**அதிகபட்ச வெப்பநிலை :**

9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

9 பிப்ரவரி முதல் 15 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.16° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

16 பிப்ரவரி முதல் 22 பிப்ரவரி வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும்.18° செல்சியஸ் முதல் 22° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மல்லிகை, நெல், கால்நடை.**

**மல்லிகை:**

மல்லிகை பயிரில் மொக்கு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படலாம். இவ்வகை புழுக்கள் மல்லிகையின் மொக்குகளைத் துளைத்து உண்ணும், தாக்கப்பட்ட மொக்குகள் லேசான மெல்லிய நூலாம் படையில் பின்னப்பட்டிருக்கும்.

தாக்கப்பட்ட பூ மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.

தோட்டத்தில் விளக்குப் பொறி அமைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

மேலும் 5 சதவீத வேப்பங் கொட்டை வடி நீர் (ஒருலிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் நன்கு காய்ந்த வேப்பங் கொட்டை தூள் மற்றும் 2 கிராம் சோப்) தெளிக்கலாம். எப்போதும் புதிதாக தயாரிக்கப்பட்ட கரைசலையே பயன்படுத்தவும்.

கரைசலை மாலை 3½ மணிக்கு மேல் தெளிப்பது நல்ல பலனைக் கொடுக்கும்.

மிகவும் அவசியமாகும்.

**நெல்:**

நெற்பயிரில் இலைச்சுருட்டு புழுக்களின் தாக்குதலுக்கு வாய்ப்பு உள்ளது. இதன் அறிகுறிகள், இலைகள் ஊதுகுழல் போல் சுருண்டு அதனுள் புழுக்கள் இருந்து கொண்டு இலையின் பச்சையத்தை சுரண்டி சாப்பிட்டு கழிவுகளை வெளியிடும். இதனால் இலைகள் வெள்ளை நிறத்தில் மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின் போது ஒட்டுமொத்த வயலும் எரிந்தது போல காணப்படும்.

இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 5சிசி என்ற அளவில் டிரைக்கோகிரம்மா ஒட்டுண்ணி அட்டையை முறையே நடவு செய்ததிலிருந்து 37, 44, 51வது நாட்களில் கட்ட வேண்டும்.

பயிருக்கு அதிகப்படியான யூரியா உரம் இடுவதை தவிர்த்திடுங்கள்.

ஏக்கருக்கு ஒன்று என்ற அளவில் விளக்குபொறி வைக்கவும்.

ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் வேப்பங்கொட்டை கரைசல் அல்லது 5 மில்லி குலோரிபைரிபாஸ் 20 சதவீத மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**கால்நடை:**

தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவமனைகளில் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் கோழிகளுக்கு (RDVK) ரானிகெட் நோய் தடுப்பு மருந்து கொடுக்கபடுகிறது. விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.